# அரசாங்க சேவை ஆணைக்குழு

## பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

### குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளர் (திணைக்கள) பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல். - 2025

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளர் (திணைக்கள) பதவியில் நிலவும் 03 வெற்றிடங்கள்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இந்தத் திணைக்களத்தில் சேவையாற்றும் தகைமைப் பெற்றுள்ள சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ). விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025 ஒக்டோபர் 30 ஆகும்.

**1. சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் அபேட்சகர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள (இல 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு அமைவாக தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயல்வலுப்பெறும் திகதி என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

**02. தேவையான தகைமைகள்**

I. சிரேஷ்ட குடிவரவு மற்றும் குடியகல்வு உத்தியோகத்தர் (சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்) பதவியில் 05 வருட சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.

II. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முன்னரான 05 வருட காலப்பகுதியில் செயலூக்கமுள்ள சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.

III. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருக்காதிருத்தல்.

குறிப்பு : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான தகைமைகளை எல்லா விதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**03. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்**

**i.** இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. மேலும், தாங்கள் விதவைகள், அனாதைகள் மற்றும் தபுதாரர், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது விதித்துரைக்கப்படும் முறைக்கேற்ப அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

ii. இந்த நியமனம் ஒரு வருட தகுதிகூர் நிலமைக் காலத்திற்கு உட்பட்டதாகும். அக்காலப் பகுதியை திருப்திகரமாக நிறைவுசெய்யும் உத்தியோகத்தர்கள்

பதவியில் நிரந்தரமாக்கப்படுவர். இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்களுக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. 2020.10.16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய மற்றைய அரசகரும மொழியில் / அரசகரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

iv. இந்த நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள், நிதி ஒழுங்கு விதிகள், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், திணைக்களக் கட்டளைகள், அரசாங்கத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் அறிவுறுத்துரைகள் என்வற்றுக்கு கட்டுப்பட்டது.

v. விண்ணப்பிக்கும் ஊடக மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. தாங்கள் நியமனம் பெறுவதற்கு தகைமைப் பெற்றுக்கொள்ளும் ஊடக மொழியாக தாங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடும் ஊடக மொழி காணப்படும்.

**04. வயதெல்லை**

ஏற்புடையதன்று

**05. சம்பள அளவுத் திட்டம்**

2025.03.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.10/2025 எனும் சம்பளச் சுற்றறிக்கைக்கு அமைய இந்த நியமனத்திற்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ.82,150 -10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 – 195,970/- (SL-1-2025) ஆகும்.

**06. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை.**

தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் புள்ளித் திட்டம் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| தொ. இல | விடயம் | புள்ளிகள் | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | <u>சேவைமூப்பு</u><br>சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவியில் 05 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்திற்கு மேலதிகமாக விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு பூர்த்திசெய்துள்ள செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல.01/2019 மற்றும் இல.01/2019 (I) இன் ஏற்பாடுகளுக்கு அமைய புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>(சேவைமூப்பு கூடிய விண்ணப்பதாரருக்கு அதிகபட்ச புள்ளிகள் வழங்கப்படும் என்பதோடு அதற்கு சமவிகிதத்தில் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு சேவை மூப்புக்கான புள்ளிகள் வழங்கப்படும்.) | | 60 |
| 02 | <u>திறமை</u><br>1. <u>மேலதிக கல்வித் தகைமைகள்</u><br>**i.** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் பட்டம்<br>அல்லது | 10 | 40 |

| | | | |
|---|---|---|---|
| | ii. இலங்கைப் பாராளுமன்றச் சட்டமொன்றினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் பட்டம்<br>அல்லது<br>iii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25A பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம். | | |
| | **2. <u>ஆங்கில மொழித் தேர்ச்சி</u>**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது அரசாங்கத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் நிறுவனமொன்றினால் பெற்றுக்கொண்ட<br>i. டிப்ளோமா அல்லது அதற்கு மேலான தகைமை அல்லது வேறு நிறுவனமொன்றிலிருந்து ஆங்கில மொழிக்குப் பெற்றுக்கொண்ட NVQ 5 அல்லது அதற்கு மேல் மட்டத்திலான சான்றிதழுக்கு **05 புள்ளிகள்**<br>ii. கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் (உள்நாட்டு அல்லது இலன்டன்) ஆங்கில மொழிக்கு ஆகக் குறைந்தது அதி திறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது IELTS (Academic) மொத்தப் புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு மேல், TOEFL-IBT 79 அல்லது அதற்கு மேல், TOEFL- CBT 213 அல்லது அதற்கு மேல், அல்லது TOEFL- PBT 550 அல்லது அதற்கு மேலான தகைமைக்கு **04 புள்ளிகள்**<br>iii. ஆங்கில மொழி தொடர்பாக பெற்றுக்கொண்ட சான்றிதழ் அல்லது நிறுவனமொன்றினால் ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுக்கொண்ட NVQ 3 மட்டத்திலான சான்றிதழுக்கு **- 03 புள்ளிகள்**<br><br>குறிப்பு – NVQ தகைமை சான்றிதழில் குறிப்பிடப்படாத போது உரிய நிறுவனத்திலிருந்து NVQ தகைமை எந்த மட்டத்திற்குரியது என்பதை உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>**கவனிக்க : அதிகூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.**<br><br>**3. <u>ஏனைய மொழித் தேர்ச்சி</u>**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் அல்லது அரசகரும மொழிகள் திணைக்களத்தின் கீழுள்ள பயிற்சி நிறுவனமொன்றினால் ஆங்கில மொழி தவிர்ந்த ஏனைய மொழிகள் தொடர்பில் பெற்றுக்கொண்டுள்ள டிப்ளோமா அல்லது சான்றிதழுக்கு,<br>i. ஒரு மொழிக்கு ஏற்புடைய டிப்ளோமாவுக்கு 2.5 புள்ளிகள் வீதம் உச்சமாக இரண்டு மொழிகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.<br>ii. ஒரு மொழிக்கு ஏற்புடைய சான்றிதழுக்கு 2 புள்ளிகள் வீதம் உச்சமாக இரண்டு மொழிகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும். | 05<br><br>05 | |

| | | | |
|---|---|---|---|
| | **4. <u>பயிற்சிப் பாடநெறிகள்</u>**<br>திணைக்களத்தினால் வழங்கப்படும் பயிற்சிப் பாடநெறிகளுக்கு பெற்றுக்கொண்ட சான்றிதழ்களுக்கு (ஆங்கில மொழி மற்றும் ஏனைய மொழிகள் தவிர்ந்த) ஒரு சான்றிதழுக்கு 01 புள்ளி வீதம் உச்சமாக 05 சான்றிதழ்களுக்கு | 05 | |
| | **5. <u>கணினி அறிவு</u>**<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொண்ட<br><br>i. கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய பட்டப் பின்படிப்பு டிப்ளோமா அல்லது அதற்கு மேலான தகைமைக்கு<br>**05 புள்ளிகள்**<br><br>ii. கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய பட்டமொன்றுக்கு.<br>**04 புள்ளிகள்**<br><br>iii. பட்டத்தின் பிரதான பாடமாக தகவல் தொழில்நுட்பத்தை கற்றிருத்தல்<br>**03 புள்ளிகள்**<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது அரசாங்கத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் நிறுவனமொன்றினால்<br><br>iv. கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் பெற்றுக்கொண்ட டிப்ளோமா அல்லது அல்லது வேறு நிறுவனமொன்றிலிருந்து கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் பெற்றுக்கொண்ட NVQ 5 அல்லது அதற்கு மேல் மட்டத்திலான டிப்ளோமா.<br>**02 புள்ளிகள்**<br><br>v. கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனமொன்றிலிருந்து கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் பெற்றுக்கொண்ட NVQ 3 மட்டத்திலான சான்றிதழ்.<br>**01 புள்ளி**<br>குறிப்பு – NVQ தகைமை சான்றிதழில் குறிப்பிடப்படாத போது உரிய நிறுவனத்திலிருந்து NVQ தகைமை எந்த மடடத்திற்குரியது என்பதை உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>**கவனிக்க – அதிகூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.** | 05 | |

| | | | |
|---|---|---|---|
| | **6. <u>பாராட்டுக்கள்</u>**<br>ஒரு பாராட்டுக்கு **01 புள்ளி**<br><br>(பொது 230 'பீ' மாதிரிப் படிவத்தில் வழங்கப்பட்ட பாராட்டுக்கள் 05 க்கு உச்சமாக புள்ளிகள் வழங்கப்படும்.)<br>(மொத்த சேவைக் காலத்திலும் பெற்றுக்கொண்ட பாராட்டுக்கள் கவனத்திற்கொள்ளப்படும்.)<br><br>**7. நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமைக்கு** | 05<br><br><br><br><br><br>05 | |
| | **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

குறிப்பு :

I. திணைக்களப் பதவியொன்றுக்கு ஆட்சேர்க்கும் போது அல்லது பதவி உயர்வு வழங்கும் போது அல்லது வினைத்திறன்காண் தடைதாண்டலொன்றில் சித்தியெய்துவதற்கு ஏற்கனவே கருத்திற்கொள்ளப்பட்டுள்ள எந்தத் தகைமையும் திறமையின் கீழ் புள்ளிகள் வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படமாட்டாது.

II. திறமையின் கீழ் ஒரு தகைமைக்கு புள்ளிகள் வழங்கப்படுவது ஒரு உப தலைப்பின் கீழ் மாத்திரமாகும்.

## 07. அபேட்சகர்களின் அடையாளம்:

உரிய முறையில் பூரணப்படுத்தி விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் உரிய முறையில் தானே அத்தாட்சிப்படுத்திய பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

## 08. விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் :

i. இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய, பூரணப்படுத்திய விண்ணப்பங்களை 2025.09…. ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் " கட்டுப்பாட்டாளர் நாயகம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், சுஹுருபாயா, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ii. சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பத்தை A4 தாளொன்றில் தயாரித்து முதல் பக்கத்தில் 01 முதல் 03 வரையும் ஏனையவற்றை 02 மற்றும் 03 ஆம் பக்கங்களில் அமையுமாறு தயாரித்துக்கொள்ளல் வேண்டும். அத்தோடு, அவற்றுக்கான தகவல்களை தனது கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும்.

iii. விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “நிறைவேற்றுத்தர சேவை வகுதியின் தரம் III உதவிக் கட்டுப்பாட்டாளர் (திணைக்கள) பதவி” எனக் குறிப்பிடல் வேண்டும்.

iv. தமது விண்ணப்பங்களை தாம் பணியாற்றும் திணைக்களத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

v. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதம் அடைதல் தொடர்பான எந்தவித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**09. பொய்யான தகவல்களை வழங்குதல்:**

தாங்கள் அனுப்பும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறானதென ஆட்சேர்ப்புக்கு முன்னர் தெரியவருமிடத்து தங்களது தகைமை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் தெரியவருமிடத்து அதற்கெதிரான நடவடிக்கைகளுக்கு உட்பட்ட வகையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**10.** வெற்றிடங்களையும் நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமலிருப்பதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரிமை உண்டு.

**11.** இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது வித்தியாசம் எழுமிடத்து சிங்கள மொழி வாசகமே மேலோங்கும்.

**12.** இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஒரு விடயம் தொடர்பில் அல்லது இந்த ஆட்சேர்ப்புச் செயன்முறையில் ஏதேனும் சிக்கல் நிலமை ஏற்படுமிடத்து அது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

செயலாளர்

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

2025 ஒக்டோபர் மாதம் …ஆம் திகதி.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**<u>குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளர் (திணைக்கள) பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல். – 2025</u>**

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

(விண்ணப்பிக்கும் ஊடக மொழிக்குரிய இலக்கத்தை கூண்டில் எழுதுக)
சிங்களம் - 2 / தமிழ் - 3 / ஆங்கிலம் - 4
குறிப்பு : விண்ணப்பிக்கும் ஊடக மொழியை மாற்ற முடியாது.

---

1.0 1.1 முழுப் பெயர் (திரு/திருமதி/செல்வி) ……………………………………………

(சிங்களத்தில் / தமிழில்) ……………………………………………………………..

1.2 முழுப் பெயர் : ………………………………………………………………...

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) …………………………………………………

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு/திருமதி/செல்வி) ……………………………

(சிங்களத்தில் / தமிழில்) ……………………………………………………………..

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு/திருமதி/செல்வி) ……………………………

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) …………………………………………………

2.0 2.1 நிரந்தர முகவரி :………………………………………………………………

(சிங்களத்தில் / தமிழில்) ……………………………………………………………..

2.2 நிரந்தர முகவரி : ……………………………………………………………….

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) …………………………………………………

2.3 அழைப்புக் கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி : ……………………………

2.4 தொலைபேசி இலக்கம் : ……………………………………………………………

3.0 3.1 பாலினம் ஆண் 0 (ஏற்புடைய கூண்டினுள் எழுதுக)

பெண் 1

3.2 திருமணமானவரா திருமணமாகாதவரா : திருமணமானவர் - 1

திருமணமாகாதவர் - 2

3.3 பிறந்த திகதி : வருடம் மாதம் நாள்

3.4 2025.10.30 ஆம் திகதிக்கு வயது வரு மாத நாள்

3.5 தேசிய அடையாள அட்டை இலக்கம்

4.0 நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ள அறிவித்தலுக்கு அமைய பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் பற்றிய விபரம்

4.1 முதல் நியமனத் திகதி : ……………………………………..

| பதவி | அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி | அந்தப் பதவியில் சேவைக் காலம் |
|---|---|---|
| தற்காலிக அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் | | |
| அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் | | |
| சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் | | |

4.2 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவியில் மொத்த சேவைக் காலம் : ……………………………………….

4.3 தகைமைகள்

| தொ. இல | தகைமைகள் | பாடநெறி | பயின்ற நிறுவனம் | காலப்பிரிவு (சான்றிதழில் உள்ளவாறு) |
|---|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள் | | | |
| 02 | ஆங்கில மொழித் தேர்ச்சி | | | |
| 03 | வேறு மொழிகள் பற்றிய தேர்ச்சி | | | |
| 04 | கணினி அறிவு | | | |
| 05 | பயிற்சி சான்றிதழ்கள் | | | |
| 06 | வேறு | | | |

கவனிக்க : சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**5.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் அனைத்து பகுதிகளும் முறையாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும் என்னால் செய்யப்படும் இந்த உறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்படுமிடத்து நியமிக்கப்படுவதற்கு முன்னர் எனின் தகைமையீனத்துக்கு உட்படுவேன் என்றும் நியமிக்கப்பட்ட பின்னர் எனின் பதவி நீக்கத்திற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன். அனைத்து சட்ட திட்டங்களுக்கும் இணங்கி ஒழுகுவேன் என்றும் குறிப்பிடுகின்றேன்.

………….. ………………………………..

திகதி கையொப்பம்.

**6.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்:**

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரான திரு./ திருமதி/ செல்வி ........................................................................................ அவர்கள், ........... ஆம் திகதி அவரது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் என்பதை அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

……………… ......................................

திகதி கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

முழுப் பெயர் :

பதவி :

(பதவி முத்திரையைப் பதிக்கவும்)

**07. திணைக்களத் தலைவரின் சிபாரிசு:**

மேற்படி தகவல்களைக் கொண்ட உத்தியோகத்தரான திரு. / திருமதி / செல்வி ................................................................................................. இந்த நிறுவனத்தில் பணியாற்றுகின்றார் என்றும் அவரால் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும் அவரது வேலை மற்றும் வரவு திருப்திகரமானது என்றும் அவருக்கு எதிராக எந்தவித குற்றச்சாட்டுக்களும் இல்லை என்றும் இந்தப் பதவிக்கு தெரிவுசெய்யப்படுமிடத்து இந்த நிறுவனத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..................................................

திணைக்களத் / நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர் :

பதவிப் பெயர் :

முகவரி :

திகதி :

(பதவி முத்திரையைப் பதிக்கவும்)